நாமும் இந்த உலகத்தால் எளிதில் திசைதிருப்பப்படுகிறோம். எந்த ஒரு அசௌகரியமோ அல்லது சிரமமோ ஏற்பட்டுவிட்டால் எளிதில் முணுமுணுக்கிறோம். இப்போது நமது வானிலை அதிக வெப்பமடைந்து வருகிறது. அடிக்கடி சீற்றமாகி வருகிறது. வெள்ளம், வறட்சி, புயல்கள் அடிக்கடி அதிகமாகி மிகத் தீவிரத்துடன் நிகழ்கின்றன. நாம் தான் உலகளாவிய வெப்பத்திற்கு காரணம் என்பதை மறந்து இதைப் பற்றி புகார் செய்கிறோம். இஸ்ரயேலர்களைப் போல புகார் செய்யும் ஒரு எதிர்காலம், மோசமடைந்து வரும் காலநிலை மாற்றத்துடன் கூடிய ஒரு யதார்த்தநிலையாகும்.

மனிதர்கள் இயற்கையின் விதிகளை மீறி பூமியைப் பராமரிக்கும் உடன்படிக்கையை மீறியிருந்தால், நம் செயல்களின் விளைவுகளை அனுபவிக்கும்போது நாம் புகார் செய்யலாமா? ஒரு மனிதன் செய்வதுபோல இயற்கை “எதிர்த்து சண்டையிடுவதில்லை” இந்த உலகில் நாம் விதிகளை மீறுகின்றோம். நாம் விதைத்ததைத் தான் அறுவடை செய்கிறோம். நாம் செய்யத் தவறியதற்கு நாம் பொறுப்பேற்கத் தவறிவிடுகிறோம்.

இஸ்ரயேல் மக்கள் மனம்திரும்பி, தங்களை மன்னித்த கடவுளிடம் திரும்பிவந்தனர். பூமியில் தற்போது வாழும் மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு பேரழிவு தரும் எதிர்காலத்தை நாம் தரவிரும்பவில்லையென்றால், நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறோமா? “எனது பெயரைப் போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று, தங்கள் பாவங்களிலிருந்து மனம் வருந்தி, இறந்து மன்றாடி, என் திருமுகத்தை நாடினால், வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுகளைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன்; அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன் (2 குறிப்பேடு 7:14)

“தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்” என்று நற்செய்தி வாசகம் நமக்குச் சொல்கிறது. வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் உலகின் தற்போதைய காலநிலையின் அவசரநிலையைப் பற்றி நாம் கொண்டிருக்கும் நமது குருட்டுத் தன்மையிலிருந்து நாம் காப்பாற்றப்படவேண்டும். வார்த்தையாலும், செயலாலும் மனம்திரும்புவதன் மூலம் மட்டுமே, கடவுளின் அருளின் அலையைத் திருப்பி, குணமளித்தலையும், எதிர்நோக்கு, நம்பிக்கை மற்றும் மக்கள் மற்றும் பூமியின் மறுஉருவாக்கத்தையும் கொண்டுவர முடியும்.✣

கடவுள் படைத்தது அனைத்தும் நல்லதே. நன்றி உணர்வுடன் ஏற்றுக்கொண்டால் எதையும் விலக்க வேண்டியதில்லை

1 திமொத்தேயு 4:4

## இன்றைய இறைவார்த்தை:

எண்ணிக்கை: 21: 4-9

திருப்பாடல்: 78: 1-2, 34-38

பிலிப்பியர்: 2: 6-11

யோவான்: 3:13-17

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு | 14 செப்டம்பர் 2025
(திருச்சிலுவையின் மகிமை)

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சூழலியல் பணித்துவம்
விரயத்தைத் தவிர்க்க அழைப்பு – உடனே செயல்படுதல்

## மாற்றத்திற்கான புகார்:

## சூழலியல் மனமாற்றத்திற்கான அழைப்பு



இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் மோசேக்கு எதிராக முறையிட்டனர். “இங்கு உணவுமில்லை, தண்ணீருமில்லை, அற்பமான இந்த உணவு எங்களுக்கு வெறுத்துப்போய்விட்டது என்றனர். எகிப்தில் கொடூரமான அடிமைத்தனத்திலிருந்து கடவுள் அவர்களை எவ்வாறு காப்பாற்றினார் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அவர்களின் பார்வை அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தின் பார்வையாக மட்டுமே இருந்தது. கடவுள் மீதான நம்பிக்கை மங்கிப்போய்விட்டது.